**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.**

S.C.No.3/2016

Deposition of witness – PW21

| | | | |
|---|---|---|---|
| Name | : துரைசாமி | Caste | : |
| S/o. | : இருசாகவுண்டர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 29.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A2 present. A1 absent, petition u/s.317 Cr.PC filed and allowed.

முதல் விசாரணை;

நான் ஓமலூர் காமலாபுரத்தில் குடியிருக்கிறேன். நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். 22.12.2014 அன்று என்னுடைய மச்சினன் ரமேஷ், மைத்துனரின் அம்மா அலமேலு, என் மைத்துனரின் மனைவி பூர்ணிமா ஆகியோர் கொத்து வேலைக்காக சேலம் டு மல்லூர் செல்லும் பேருந்தில் சேலம் புதிய பேருந்து நிலையத்தில் ஏறி செல்லும்போது சந்தியூர் பிரிவு அருகே எதிரே நாமக்கல் பக்கமிருந்து சேலம் நோக்கி வந்த மணல் லாரி ஜோதி பேருந்து மீது இடித்து, பின்புறமாக வந்த இருசக்கர வாகனத்தின் மீது இடித்ததாக எனது மைத்துனர்

தொலைபேசி மூலமாக எனக்கு தகவல் சொல்லி உடனடியாக நான் விபத்து நடந்த சந்தியூர் பிரிவிற்கு சென்று பார்த்தேன். எனது மைத்துனரின் மனைவி பூர்ணிமாவிற்கு தலையில் அடிபட்டு வயிறு கிழிந்து கை கால்களில் அடிபட்டு இறந்து கிடந்தார். பின்னர் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்து நடந்த விவரத்தை கேட்டார்கள். நான் நடந்ததை சொன்னேன். இது குறித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –

நான் சம்பவ இடத்திற்கு போனபோது மதியம் 2, 3 மணி இருக்குமா என்றால் 12.00 மணி இருக்கும். எனக்கு தகவல் 10.30 மணிக்கு வந்தபோது நான் எங்கே இருந்தேன் என்றால் காமலாபுரத்தில் இருந்தேன். சம்பவ இடத்திற்கு போலிசார் வந்த போது 4.00 மணி இருக்குமா என்றால் இருக்கும். நான் சென்றபிறகுதான் போலிசார் வந்தார்களா என்றால் ஆம். நான் அங்கு சென்றபோது அங்கிருந்தவர்கள் பஸ்காரன் இப்படி செய்துவிட்டானே என்று அழுதுகொண்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தன்று சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.